மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து தொழில்நுட்பக் கல்லூரியா, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியா அல்லது பொறியியல் கல்லூரியா என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

திரு. எஸ். வெங்கடேசன்: *அரசு கலைக் கல்லூரி.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சார்ந்திருக்கிற அந்தத் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு, நிதியும் வழங்கப்பட்டு, ஆனால் இன்னும் கட்டடப் பணிகள் அங்கே தொடங்கப்படவில்லை என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார். ஏற்கெனவே தமிழகத்திலே நடந்துகொண்டிருக்கிற கல்லூரிகளுக்கெல்லாம் எங்கெங்கெல்லாம் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறதோ, அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.7.25 கோடி நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே தமிழகத்தில் கட்டடம் இல்லாமல் இருக்கிற அத்தனைக் கல்லூரிகளுக்கும் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

கூட்டுறவு வங்கி

***6402—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிதி நிலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) 2005 ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டை முடக்க ஆதிக்க சக்திகள் முனைந்தபோது அதனை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள் இவ்வங்கியின் செயல்பாட்டுக்காக ரூபாய் 12.50 கோடியை பங்கு மூலதனமாக உடனடியாக வழங்கி வங்கியின் சேவை தொடர்வதற்கு அடித்தளம் இட்டார்கள். இவ்வங்கியானது 26-12-2011 முதல் மாண்புமிகு அம்மா அவர்களின் 3 ஆவது முறையான இந்த ஆட்சி அமைந்தது முதல் இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமையைப் பெற்றுள்ளது. இன்றைக்கு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் இவ்வங்கியின் தலைமை அலுவலகம் ரூபாய் 30 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்டதோடு ரூபாய் 28 இலட்சம் மதிப்பில் இவ்வங்கியின் 2 கிளைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்கப்படும் நிலையில் உள்ளன.

முற்பகல் 10-45

வங்கிக்கு பங்கு மூலதனமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டதோடு அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 2 கோடி ரூபாய் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வங்கி 2011-2012 ஆம் நிதியாண்டில் சிறப்பாகச் செயல்பட்டு, ரூ.4.51 கோடி இலாபம் ஈட்டியுள்ளதோடு, 31-12-2012 வரை வங்கியின் வைப்புத் தொகை ரூ.205.83 கோடியாக உயர்ந்துள்ளது. இவ்வங்கி தற்போது வணிக வங்கிகளுக்கு இணையாக பொதுமக்களுக்கும், அதன் இணைப்புச் சங்கங்களுக்கும் சேவையாற்றும் வகையில், நிகழ் நேர நிதி பரிமாற்ற சேவை அதாவது, Core Banking Solutions *பணிகள் நிறைவுப்பெறும் நிலையில் உள்ளது. இந்த வங்கியின் இத்தகைச் சிறப்பானச் செயல்பாடுகளுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கைகளும், வழிகாட்டுதல்களுமே காரணம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் பெருகிட, நிலவர் சாபம் தவிர்த்திட, தடைகள் கோடி எதிர்கொண்டு, குடகு மலையை பெயர்த்தெடுத்து, சோழர் பூமியில் நடவு செய்து, பஞ்சம் நீக்கி, பசி பிணியைப் போக்கிட, தவித்த மக்களுக்கு தாகச் சாந்தி அளித்திட, பூவிழி புன்னகை பூத்த புவியிலே காவிரி தந்திட்ட காவியத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியப் பகுதிக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் நிதியை ஒதுக்கீடு செய்து, எங்கள் மக்களின் குடிநீர் தாகத்தை தீர்த்த தாயே! முதலில் எங்கள் தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் தங்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, ஏழு முறை நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிப் பெற்று, மத்தியிலே ஆட்சியிலே இருந்த திரு. ப. சிதம்பரம் அவர்களால் 2005 ஆம் ஆண்டு மூடு விழா கண்ட நேரத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு 12.5 கோடி ரூபாய் தந்து, வங்கியை சிறப்புறச் செய்துள்ளார்கள். இப்போது சிறந்து விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய அந்த வங்கிக்கு மேலும் நிதியுதவி அளித்தால், மழையை மட்டுமே நம்பி வாழக்கூடிய பசும்பொன் சிவகங்கை மாவட்ட மக்கள் மழை பெய்தவுடன், வங்கியில் கடனைப் பெற்று அங்கே விவசாயம் செய்வதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, அந்த வங்கிக்கு இன்னும் கூடுதலாக நிதியைக் கொடுத்து, மக்களின் வாழ்வாதாரம் சிறக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உதவ வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது, இப்போது மத்திய ரிசர்வ் வங்கியின் உரிமையைப் பெற்றுள்ளது. முந்தைய அரசால் அறிவிக்கப்பட்ட விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தில் அரசின் உதவித் தொகை முழுமையாக விடுவிக்கப்படாத நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு

253 கோடி ரூபாய் வழங்கினார்கள். அப்படி வழங்கப்பட்ட நிதியிலிருந்து, சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு 2.44 கோடி ரூபாய் வழங்கியதன்மூலம் அதனுடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களுக்கு 84.5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர் நிதியாகவும் இப்போது வழங்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இப்போது டெப்பாசிட்டும் அதிகரித்திருக்கிறது. கூட்டுறவு வங்கிகளில் டெபாசிட் செய்ய மக்கள் மத்தியில் இப்போது ஒரு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த வங்கியானது நல்ல நிதிநிலையும் பெற்றுள்ளது. இதேநேரத்தில் வைத்தியநாதன் குழு பரிந்துரையின் அடிப்படையில், நம்முடைய மாநில அரசினுடைய பங்கு முழுமையும் கொடுத்த நிலையில், மத்திய அரசு வழங்க வேண்டிய பங்கான 597.52 கோடி ரூபாயை இன்னும் வழங்கவில்லை. மத்திய அரசு ரூ.597.52 கோடி வழங்கும்பட்சத்தில் நம்முடைய சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ.11.80 கோடியும், சிவகங்கை மாவட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ரூ.33.49 கோடியும் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே தேர்தல் வர இருக்கிறது என்ற அறிகுறிக்கு வேண்டுமானால் ப. சிதம்பரம் அவர்கள் தொகுதிக்கு வாரத்திற்கு இரண்டு முறை வருவார்கள். வந்தபின் தெருமுனைகளிலே இருக்கக்கூடிய பகுதிகளிலே தனியார் வங்கிகளைத் திறப்பார்கள். இதன்மூலம் அப்பகுதி மக்கள் எந்தப் பயனும் பெற முடியாத நிலையில், இன்றைக்கு அரசு வங்கியாக சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் அதற்கு அதிக நிதியை ஒதுக்கித் தந்தால் மக்கள் பயன்பெறுவார்கள் என்ற எண்ணத்தை இங்கே தெரிவித்தேன். மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு அதைச் செய்து தரும் என்ற நம்பிக்கையுடன் அமர்கின்றேன்.